**விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டத்தின் - 2020**

---

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2019 சனவரி 17 ஆம் திகதிய 3698 எஸ்ஆர்ஜ மற்றும் 3699 எஸ்ஆர்ஜ (சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் ஐஈ ஆம் உறுப்புரையின் 4.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் களனி பல்கலைக்கழகம், இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகம், இலங்கை சபரகமுவ பல்கலைக்கழகம் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம் என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நாட்டின் உயர்கல்வி முறைமையில் வேலைவாய்ப்பு சார்ந்த தொழில்நுட்ப பட்டப்படிப்புக்களுக்கான அணுகல் வசதிகளை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 30,051.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 165 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,408.85 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 145 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஏப்ரல் 17 இல் முற்திகதியிடப்பட்ட நிதியளிப்பின் கீழ் ஆரம்பித்திருந்ததுடன் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

---

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக மற்றும் நிதி செயன்முன்னேற்றம்

செயற்திட்டத்தின் செயற்பாடுகள் பின்வரும் பெயர்களிலான 5 கூறுகளின் கீழ் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

(அ) புதுமையான தொழில்நுட்பம் மற்றும் கைத்தொழில்துறை தொடர்பான கல்வி மற்றும் ஆராய்ச்சி வசதிகளை வழங்குதல்
(ஆ) கைத்தொழில்துறை தேவை மற்றும் சர்வதேச நியமங்களுடன் சீரமைக்கப்பட்ட தரமான பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் கல்விசார் பணியாளர்களுக்கு உதவுதல்
(இ) போட்டிக் கைத்தொழில் துறை மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழக ஒத்துழைப்புத் திட்டத்தை வழங்குதல்
(ஈ) இயலளவு அபிவிருத்தி வாய்ப்புக்கள்
(உ) 2021 ஆம் ஆண்டில் அங்கீகாரத்திற்காக முன்மொழியப்பட்ட புதிய உயர் கல்வி செயற்திட்டத்தை தயாரிப்பதில் அரசாங்கத்தை ஆதரித்தல்.

| இல. | கூறுகள் | செயற்பாடுகள் | ஆரம்பிக்கப் படுவதற்கு பட்டியலிடப் பட்ட காலப்பகுதி | ஆரம்பித்த திகதி | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- | --- | --- | --- |
| ----- | ------------ | ------------------- | ------------------- | ------------- | --------------------- | ------------------ |
| (அ) | புதுமையான தொழில்நுட்ப கற்றல் மற்றும் ஆராய்ச்சி சுற்றாடலை உருவாக்குதல் | வடிவமைப்பு மற்றும் கட்டமைக்கப்பட்ட அடிப்படையில் ரஜரட்ட பல்கலைக்கழகத் திற்கான கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கா ன கேள்வி ஆவணங்களைத் தயாரித்தல். | 2018 ஆம் ஆண்டினுள் | இன்னும் தொடங்கவி ல்லை. | செயற்திட்டத்தின் ஆட்சேர்ப்பு தாமதங்கள் காரணமாக 2018 ஆம் ஆண்டின் இறுதியில் நான்கு நிர்மாணங்கள், நான்கு பீட கட்டிடங்களின் சிவில் வேலைகள் தொடர்பான பெறுகை என்பன தொடங்கப்பட்டது. | காலதாமதத்தை தடுப்பதற்கும் மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கு ஒப்பந்த பணிகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற் கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | புதுமையான தொழில்நுட்ப கற்றல் மற்றும் ஆராய்ச்சி சுற்றாடலை உருவாக்குதல் | களனி, ரஜரட்ட, ஸ்ரீ ஜயவர்த்தனபுர மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங் களில் விரிவான வடிவமைப்பு, முழுமையான நிர்மாணத் திட்டங்களை அங்கீகரித்தல் மற்றும் சிவில் வேலைகளைத் தொடங்குதல் | 2019, 4 ஆம் காலாண்டு | நிர்மாண வேலைகள் இன்னும் தொடங்கவி ல்லை. | செயற்திட்டத்தின் ஆட்சேர்ப்பு தாமதங்கள் காரணமாக 2018 ஆம் ஆண்டின் இறுதியில் நான்கு நிர்மாணங்கள், நான்கு பீட கட்டிடங்களின் சிவில் வேலைகள் தொடர்பான பெறுகை என்பன தொடங்கப்பட்டது. | காலதாமதத்தை தடுப்பதற்கும் மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கு ஒப்பந்த பணிகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற் கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | தரம் மற்றும் கைத்தொழில் துறை சார்ந்த உயர் தொழில்நுட்ப கல்வி நிகழ்ச்சித்திட்ட ங்களை அமுல்ப்படுத்து தல் | வேலைவாய்ப்பு சார்ந்த புதிய பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டத் திற்காக பெண் பங்குபற்றுநர்கள் உட்பட கைத்தொழில் துறை அமைப்புகளை நடாத்துதல் | 2018 ஆம் ஆண்டினுள் | 2020 ஆம் ஆண்டு | - | செயற்திட்ட அங்கீகார ஆவணத்தின் தேவைப்பாடுகளுட ன் இணங்குதல் வேண்டும். |
| (ஈ) | பீட முகாமைத்துவ இயலளவை வலுப்படுத்துதல் | நான்கு பல்கலைக்கழகங் களில் பெண்களுக்கான விசேட நிகழ்ச்சித்திட்டங் கள் உட்பட, தொழில் வழிகாட்டல் மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டல் | 2019, 2 ஆம் காலாண்டு | 2020 | - | மேலதிக தாமதமின்றி தாமதமான செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | நிலையத்திற்கான செயற்பாட்டுக் கையேட்டை உருவாக்குதல். | | | | |
| (உ) | புதிய உயர்கல்வி செயற்திட்ட தயாரிப்புக்கான ஆதரவு | உயர்கல்வி அல்லது புதுமைக்கான பாலினம் தொடர்பான வடிவமைப்பு அம்சங்கள் உட்பட எண்ணக்கரு தாளைத் தயாரித்தல் | 2019, 1 ஆம் காலாண்டு | இன்னும் தொடங்கவில்லை | - | மேலதிக தாமதமின்றி தாமதமான செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட வேண்டும். |

## 2.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) ரஜரட்ட, சப்ரகமுவ, களனி மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களில் நான்கு பீட கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான ஒப்பந்ததாரர்களைத் தெரிவு செய்வதற்கான பெறுகை செயன்முறை 2017 சனவரியில் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் சப்ரகமுவ, களனி மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகங்கள் மாத்திரமே ஐ.அ.டொலர் 67.5 மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 2017 ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்ட பீடக் கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான பெறுகை செயன்முறையை பூர்த்தி செய்திருந்தன. | செயற்திட்டத்தின் ஆட்சேர்ப்பு தாமதங்கள் காரணமாக 2018 ஆம் ஆண்டின் இறுதியில் நான்கு நிர்மாணங்கள், நான்கு பீட கட்டிடங்களின் சிவில் வேலைகள் தொடர்பான பெறுகை என்பன தொடங்கப்பட்டது. | காலதாமதத்தை தடுப்பதற்கும் மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கு ஒப்பந்த பணிகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் பீடக் கட்டிடத்தின் நிர்மாண வேலை வழங்கப்பட்டிருக்காத போதிலும் கேள்வி செயன்முறையின் முன்னேற்றம் கணக்காய்வு திகதியான 2020 ஏப்ரல் 30 வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும், நிர்மாண | - | காலதாமதத்தை தடுப்பதற்கும் மேலதிக கிரயங்களை தவிர்ப்பதற்கு ஒப்பந்த பணிகள் உரிய காலத்தில் பூர்த்தி செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வளாகத்தில் உள்ள உயர் அழுத்தக் கம்பியை அகற்றுவதற்காக இலங்கை மின்சார சபைக்கு ரூபா 11 மில்லியன் செயற்திட்ட நிதி செலுத்தப்பட்டிருந்தது.

**2.3 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்**

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ஐ.அ.டொலர் 145 மில்லியன் கடன் தொகை பெறுவனவில் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 6.8 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஐ.அ.டொலர் 9.86 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து 03 ஆண்டுகள் கடந்த பின்னரும் பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஏடிபீ இன் திருத்தப்பட்ட பணவளிப்பு திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட பணவளிப்பு ஐ.அ.டொலர் 18.59 மில்லியன் ஆக உள்ளமை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் சிவில் வேலைகளின் பெறுகை செயன்முறை தொடர்பான தவிர்க்க முடியாத சூழ்நிலைகள் காரணமாக களனி மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீட கட்டிடங்கள் மற்றும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கான மூன்று ஒப்பந்தங்களை மாத்திரமே 2020.12.31 இற்கு முன்னர் எங்களால் வழங்க முடிந்திருந்தது. | செயற்திட்ட காலப்பகுதியின் போது செயற்திட்டத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.4 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது நிதிப் பயன்பாட்டு இலக்கு ஐ.அ.டொலர் 42.5 மில்லியனில் இருந்து ஐ.அ.டொலர் 18.59 மில்லியனாகக் குறைக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் ஆரம்ப ஆண்டு 2018 முதல் 2019 வரை எந்தவொரு ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணமும் இல்லாமல் மாற்றப்பட்டது. ஆகையால் | செயற்திட்ட உடன்படிக்கை 2019.01.17 இல் கைச்சாத்திடப்பட்டிருந்தது என்பதையும் கடன் நடைமுறைக்கு வரும் திகதி 2019.04.04 ஆக இருந்தது என்பதையும் தயவுசெய்து தெரிவிக்கவும். அதன் பிரகாரம் நிதிப் பயன்பாட்டு இலக்கு ADB ஆல் ஐ.அ.டொலர் 18.59 வரை குறைக்கப்பட்டிருந்தது. | நிதிப் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதிகளைப் பயன்படுத்துதல் மற்றும் செயற்திட்டக் காலப்பகுதி என்பவற்றிற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் காரணமாக, செயற்திட்ட காலப்பகுதியினுள் செயற்திட்டத்தின் உரிய செயற்பாடுகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறை வேலையாக ஏற்பட்ட ரூபா 76.9 மில்லியன் தொகையில் அதாவது மொத்தச் செலவினத்தில் 69 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 52.8 மில்லியன் தொகை செயற்திட்ட முகாமைத்துவ செலவினங்களாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. | செயற்திட்ட நிர்வாகக் கைநூலின் பிரகாரம் மீண்டெழும் செலவினங்களாக அறிமுகப்படுத்தப்பட்ட செலவின வகைகள் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் ஏனைய நடைமுறை வேலையாக மாத்திரமே உள்ளடக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம் செயற்திட்டக் காலப்பகுதி முழுவதும் தொடருகின்ற ஆலோசனை, நீண்டகால பயிற்சி, குறுங்கால பயிற்சி மற்றும் செயற்திட்ட முகாமைத்துவ செலவினங்கள் போன்ற செலவினங்கள் ஏனைய நடைமுறை வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | நிதிப் பயன்பாட்டின் வினைத்திறனை அதிகரிப்பதற்கு செயற்திட்டத்தின் செயற்பாடுகள் முறையாக திட்டமிடப்பட வேண்டும். |
| (இ) | களனி, ரஜரட்ட மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களுக்கு கொவிட்-19 பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு செயற்திட்டம் ரூபா 4.3 மில்லியன் தொகையை செலவிட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் செயற்திட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் வரவில்லை. | கொவிட்-19 பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்தல் செயற்திட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் வரவில்லை என்பது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. எவ்வாறாயினும், இது திடீரென எதிர்பாராத சூழ்நிலையாக காணப்பட்டதால் செயற்திட்டத்தின் நோக்கெல்லை காணப்பட்ட போதிலும் பெறுகை திட்டத்தை திருத்தியமைத்து கொவிட்-19 பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ADB அங்கீகாரத்தை வழங்கியிருந்தது. | செயற்திட்டத்தின் நோக்கங்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் செயற்திட்டத்தின் செயற்பாட்டு கிரயத்தை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**2.5 முறைமை மற்றும் கட்டுப்பாடு**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | செயல்நடவடிக்கைத் திட்டம் 2020 இன் பிரகாரம் ரூபா 217.63 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயம் தொர்பிலான 23 பெறுகை நடவடிக்கைகள் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் குறித்த பெறுகை நடவடிக்கைகள் 2021 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | - | PMU ஆல் மேற்கொள்ளப்படும் பெறுகை பணிகளைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக உறுதியான மற்றும் வினைத்திறனான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மூன்று பல்கலைக்கழகங்கள் 2019 ஆம் ஆண்டில் ரூபா 292.9 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் 14 பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தால் குறித்த பெறுகை நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | - | PMU ஆல் மேற்கொள்ளப்படும் பெறுகை பணிகளைக் கண்காணித்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தொடர்பாக உறுதியான மற்றும் வினைத்திறனான பெறுகை முகாமைத்துவ முறைமை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |